(சுருக்கம்)

திருத்திய ஊதிய விகிதங்கள், 2009 – காவல் துறையில் பணிபுரியும் காவலர் நிலை–I, தலைமைக் காவலர், காவல்துறை உதவி ஆய்வாளர்களுக்கு ஊதிய திருத்தம் அனுமதித்து ஆணையிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

அ.ஆ. நிலை எண்:66

நாள்: 26—2—2011.
மாசி, 14.
திருவள்ளுவர் ஆண்டு, 2042.

**படிக்கவும்**:--

1. அரசாணை நிலை எண்.234, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
2. அரசாணை நிலை எண்.235, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 1–6–2009.
3. அரசு கடித எண்.41530 / ஊதியப் பிரிவு / 2009–1, நிதித்துறை, நாள்: 28–7–2009.
4. அரசு கடித எண்.63305 / ஊதியப் பிரிவு / 2010–1 மற்றும் 2, நிதித்துறை, நாள்: 8–11–2010.
5. அரசாணை நிலை எண்.308, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 26–8–2010.
6. அரசாணை நிலை எண்.45, நிதி (ஊதியப் பிரிவு)த் துறை, நாள்: 10–2–2011.

- - - - - -

**ஆணை:–**

அலுவலர் குழு, 2009–ன் பரிந்துரைகளின்படி அனைத்து துறைகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் / தட்டச்சர்கள் மற்றும் உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய பணியிடங்களுக்கு திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200 –20200 + தர ஊதியம் ரூ.2400 அனுமதித்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–1–2007 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன. அவ்வாறே காவலர் நிலை–I, தலைமைக் காவலர், காவல் துறை உதவி ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுக்கும் திருத்திய ஊதிய விகிதங்கள் முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000/–, 5200—20200 + தர ஊதியம் ரூ.2400/– மற்றும் ரூ.9300—34800 + ரூ.4300/– நிர்ணயித்து ஆணையிடப்பட்டது. மேலும் ஒரு நபர் குழுவின் பரிந்துரைகளின்படி உதவி ஆய்வாளர் பணியிடத்திற்கான ஊதிய விகிதம் ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4300–லிருந்து ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4400–ஆக திருத்தியமைத்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–8–2010 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே–6–ல் படிக்கப்பட்ட அரசாணையில் அனைத்து துறைகளில் உள்ள இளநிலை உதவியாளர் / தட்டச்சர், உதவியாளர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை–III ஆகிய

.... / 2 /

பணியிடங்களுக்கு முறையே ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–ஆகவும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2800–ஆகவும் நிர்ணயம் செய்து 1–1–2006 முதல் கருத்தியலாகவும் 1–2–2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. காவலர் நிலை–I மற்றும் தலைமைக் காவலர் ஆகிய பணியிடங்களுக்கு இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்களுக்கு அனுமதிக்கப்பட்ட முந்தைய ஊதிய விகிதமான ரூ.3200—4900 மற்றும் ரூ.4000—6000–க்கு இணையான திருத்திய ஊதிய விகிதம் அலுவலர் குழு, 2009 பரிந்துரையின்படி ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000 மற்றும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400 நிர்ணயம் செய்யப்பட்டு சமநிலையில் இருந்து வந்துள்ளனர். இந்நிலையினைக் கருத்தில் கொண்டு மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கு ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2000–லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400 மற்றும் ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ.2400 லிருந்து ரூ.5200—20200 + தர ஊதியம் ரூ. 2800–ஆக ஊதிய திருத்தம் செய்யப்பட்டதை மேற்கூறிய காவல்துறைப் பணியிடங்களுக்கும் நீட்டிக்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் காவல்துறை உதவி ஆய்வாளர்கள் ஐந்தாவது ஊதியக்குழு மற்றும் அலுவலர் குழு, 98–ன் ஊதிய விகிதங்களில் அமைச்சுப்பணி கண்காணிப்பாளர்களுக்குரிய ஊதிய விகிதமான ரூ.1600—2660 / ரூ.5300—8300 அனுமதிக்கப்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு காவல் துறை உதவி ஆய்வாளர் பணியிடத்திற்கு தற்போது அமைச்சுப்பணி கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதமான ரூ.9300—34800 + தர ஊதியம் ரூ.4800/–ஐ நிர்ணயம் செய்ய முடிவெடுத்து அதற்கிணங்க கீழ்கண்ட பணியிடங்களின் ஊதிய முரண்பாடுகளைக் களைந்து ஊதிய திருத்தங்கள் மேற்கொள்ள அரசு ஆணையிடுகிறது :––

| வரிசை எண். | **பணியிடங்களின் பெயர்** | **தற்போதைய ஊதிய விகிதம் (ஊதிய விகிதம் + தர ஊதியம்)** | **திருத்தியமைக்கப்படும் ஊதிய விகிதம் + தர ஊதியம்** |
|---|---|---|---|
| | | **ரூ.** | **ரூ.** |
| 1. | காவலர் நிலை–1 | 5200—20200 + 2000 | 5200—20200 + 2400 |
| 2. | தலைமைக் காவலர் | 5200—20200 + 2400 | 5200—20200 + 2800 |
| 3. | காவல்துறை உதவி ஆய்வாளர் | 9300—34800 + 4400 | 9300—34800 + 4800 |

6. மேற்கூறிய ஊதிய திருத்தங்கள் 1–-1––2006 முதல் கருத்தியலாகவும் 1––3––2011 முதல் பணப்பயன் பெறும் வகையிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்,**
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மைச் செயலாளர், உள்துறை, சென்னை –2.
இயக்குநர், காவல் துறை, சென்னை –4.
மாநில கணக்குத் துறைத்தலைவர் ( கணக்குகள் (ம) உரிமைத்தொகை), சென்னை –18.

.......... / 3 /

முதன்மை மாநில கணக்குத் துறைத்தலைவர் ( தணிக்கை –1), சென்னை –18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் ( தணிக்கை –II), சென்னை –18.
மாநில கணக்குத் துறைத்தலைவர் (CAB). சென்னை –9/மதுரை.
கருவூலக் கணக்கு இயக்குநர், சென்னை-15.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச்செயலகம், சென்னை – 9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர் ( வடக்கு / தெற்கு / கிழக்கு), சென்னை –1 / 35 / 5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.
அனைத்து கருவூல அலுவலர்கள் / சார்நிலைக் கருவூல அலுவலர்கள்.

நகல் பெறுவோர்
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை –2.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை –2.
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை –2.
அரசு தலைமைச்செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை–2.
அரசு முதன்மைச்செயலாளரின் தனிச்செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளர், நிதித்துறை, சென்னை–9.
ஆணையர், காவல்துறை, சென்னை-8.
உள் ( காவல்)த்துறை, சென்னை –2
நிதி ( உள்)த்துறை, சென்னை –9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

து. ஸ்ரீதர்
26/2/2011

ஆராய்ச்சி அலுவலர்.